(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 387/2019 அ.சா.7

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஆறுமுகம் |
| Father's name | : | |
| Village | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026.

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது அவனியாபுரம் செம்பூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் கிளாஸ் ஒர்க் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன வினோத் என்பவரை எனக்கு தெரியும். இவ்வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் இன்றிலிருந்து சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு என் வீட்டில் தூங்கி கொண்டிருந்தேன். அப்போது வினோத்தின் தாயார் அழுதுகொண்டே ஓடி வந்தார். நானும் எனது அண்ணன் அ.சா.5 பாலமுருகன் என்பவரும் வினோத் வீட்டில் சென்று பார்த்தோம். அங்கு வினோத் இரத்த வெள்ளத்தில் கட்டிலில் கிடந்தார். பின்பு ஆம்புலன்சிற்கு போன் செய்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து நானும், எனது சகோதரர் பாலமுருகன் மற்றும் வினோத்தின் தாயார் ஆகியோர்கள் உடன் சென்று மருத்துவமனையில் இருந்தோம். பிறகு இரண்டு மணி நேரம் கழித்து வினோத் இறந்துவிட்டதாக சொன்னார்கள். சம்பவம் நடந்தது சுமார் அதிகாலை 03.00 அல்லது 03.30 மணி இருக்கும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :- இல்லை.</u>**

Sd/- ஆறுமுகம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.06.29 19:02:13 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.